**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213052

1. District : மாவட்டம் திருச்சி    P.S. காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு    Year ஆண்டு 2023    FIR No.: மு.த.அ. எண் 14    Date: நாள் 15.9.23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018)    Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 14.9.23    Date to : நாள் வரை 18.00 hrs
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.9.23    Time : நேரம் 07.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவலநிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1 km North East
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி மாவட்ட குற்றப்பிரிவு-II மாவட்ட காவல் அலுவலகம், திருச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஆதா    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் புலிகேசி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.6.77    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் பத்திர பதிவு எழுத்தர்    (g) Address : முகவரி No.1E, இந்திரா நகர், திருவெறும்பூர், திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஆல்பர்ட், காவல் துணைக் கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப்பிரிவு-II, மாவட்ட காவல் அலுவலகம், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……………………. Rank ……………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15.09.2023 [signature] 15/09/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 15.09.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.MANIKANDAN.
Rank: நிலை DSP ……… No. எண் DAHC. TRICHY.

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2023-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், இன்று 15.09.2023 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி திருவெறும்பூர், நெ.1E, இந்திரா நகர் என்ற முகவரியில் வசித்து வரும் புலிகேசி என்பவரது மனைவி A.ராதா. என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தகவல் தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு-IIல் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.ஆல்பர்ட் மற்றும் இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி. ராதா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 15.09.2023 காலை 09.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.14/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் A.ராதா, க/பெ. புலிகேசி, நெ.1E, இந்திரா நகர், திருவெறும்பூர், திருச்சி. பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி மாவட்டம். அய்யா, நான் திருச்சிமாவட்டம், திருவெறும்பூர் இந்திரா நகரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பத்திரபதிவு எழுத்தராக திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் அலுவலகம் அமைத்து தொழில் செய்து வருகிறேன். பத்திரப்பதிவு தொடர்பாக என்னிடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு கட்டணம் பெற்றுக் கொண்டு அவர்களது வேலையை செய்து கொடுத்து வருகிறேன். எனக்கு உதவியாக எனது உறவினர் அசோக்குமார் என்பவர் இருந்து வருகிறார். கடந்த ஜுன் 2019ல் திருவெறும்பூர் பூலாங்குடியைச் சேர்ந்த சப்பாணி மகன் குமார் என்பவர் என்னிடம் வந்து பூலாங்குடி கிராம ரீசர்வே எண்.144/9சி என்ற இடத்தில் உள்ள இரண்டு வீட்டுமனைகளை விற்பனை செய்ய வேண்டி அதற்கானஆவணங்களை என்னிடம் கொடுத்து கிரய ஆவணப்பதிவு முடித்துக் கொடுக்குமாறு கூறினார். அவர் என்னிடம் கொடுத்த ஆவணங்களை வைத்து அந்த வீட்டு மனைகளுக்கு நான் கிரய பத்திரம் தயார் செய்து திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 20.6.2019 அன்று ஆவண எண்.3238/2019 பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு சுமார் 3 மாதம் கழித்து மேற்படி குமார் தான் செய்து கொடுத்த பத்திரத்தில் சில திருத்தங்கள் செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொண்டதன்பேரில், அந்த பத்திரத்தில் சில திருத்தங்கள் செய்து மீண்டும் ஆவண எண்.4876/2019 பதிவு செய்து கொடுத்தேன். மேற்படி பத்திரப்பதிவுக்கு பிறகு குமாருக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. அதற்கு பிறகு சுமார் ஒன்றரை வருடம் கழித்து பிப்ரவரி-2021ல் சப்பாணி மகன் குமார் என்பவர் செய்து கொண்ட பத்திரப்பதிவு தவறானது என்று சுந்தரம் என்பவர் அளித்த புகாரின்பேரில் 9 நபர்களின் மீது திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு Cr.No.1/2021, u/s 419, 420, 423, 465, 467, 468, 471, 34 என்ற பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தார்கள். அந்த விசாரணையில் மேற்படி குமாருக்காக பத்திரப்பதிவு செய்து கொடுத்தேன் என்று கூறி திருச்சி மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு தனிப்பிரிவு போலீசார் என்னையும் எனது உதவியாளர் அசோக்குமாரையும் அழைத்துச் சென்று விசாரணை செய்து பின், என்னையும் எனது

உதவியாளர் அசோக்குமாரையும் கைது செய்தனர். என்னை சொந்த ஜாமீனிலும், அசோக்குமாரை சிறையில் அடைத்தும் நடவடிக்கை எடுத்தனர். அதற்கு பிறகு இது தொடர்பாக என்னையும் அசோக்குமாரையும் போலீசார் விசாரணை எதுவும் செய்யவில்லை. இந்நிலையில் மேற்படி வழக்கிற்காக என்னை 11.9.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கடந்த வாரம் திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு–II அலுவலகத்திலிருந்து அழைப்பாணை அனுப்பியிருந்தனர். அதன்பேரில், திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு–II அலுவலகத்திற்கு கடந்த 11.9.2023ம் தேதி முதல் 13.9.2023ம் தேதி வரை தொடர்ந்து விசாரணைக்காக சென்று வந்தேன். அதுபோல் நேற்றும் 14.09.2023 மாலை சுமார் 6 மணியளவில் விசாரணைக்கு சென்றபோது என்னை விசாரணை செய்த திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு–IIன் DSP திரு.ஆல்பர்ட் அவர்கள் இந்த வழக்கின் புகார்தாரர் சுந்தரத்திற்கு பத்து லட்சரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் 16.9.2023 அன்று ஒரு லட்ச ரூபாய் கொடுத்திட்டு பாக்கிய ரெண்டு மாசத்தில் கொடுக்கனும்னு மிரட்டி எழுதி என்னிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டனர். பின் DSP திரு.ஆல்பர்ட் அவர்கள் என்னிடம், இந்த கேஸ்ல நீ உள்ள போகனும், பொம்பளங்கறதால உன்னய விடுறேன், இப்பவும் உனக்கு சாதகமாத்தான் முடிச்சிக் கொடுத்திருக்கேன், இந்த கேச இதோட குளோஸ் பண்ணிடுறேன், அதுக்காக எனக்கு தனியாக 1 லட்ச ரூவா நாளைக்கு 15.09.2023 கொண்டாந்து கொடுத்திடு என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், இந்த நிலத்துக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்ல சார், நான் டாக்குமென்ட் மட்டும்தான் தயார் பண்ணி கொடுத்தேன். அதுக்கு போய் என்ன பத்து லட்சரூவா கொடுக்க சொல்றீங்களே என்றேன். அத விடும்மா, நாளைக்கு எனக்கு தனியா 1 லட்ச ரூவாய கொண்டு வந்திடு, அவங்களோட பத்து லட்சத்த பத்திஅப்புறம் பேசிக்கலாம், இப்ப நீ கெளம்பும்மா என்று சொல்லிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் சரிங்க சார், நீங்க உங்களுக்கு கேட்ட 1 லட்ச ரூவாய மட்டும் நாளைக்கு கொண்டு வந்திடுறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு–IIன் DSP திரு.ஆல்பர்ட் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (A.ராதா) 15.9.2023. Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for the Prevention of Corruption Act cases, Trichy. Received this report at 07.00 hrs. on 15.09.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.14/2023; u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 09.30 hrs. on 15.09.2023. Sd.xxx (G.MANIKANDAN) 15/09/2023 Deputy Superintendent of Police, V&AC, Trichy.

(signature) 15/09/23
(G.MANIKANDAN)
DSP. V&AC.
TRICHY.